[2007 ஏப்ரல் 3

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: எனக்கு right இருக்கிறது, நான் சொல்வதற்கு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சின்னசாமி, சும்மா துள்ளாதீர்கள், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். "Rural Electrification Corporation, 16,000 கோடி ரூபாய் அளவில் மின் வாரியத்திற்கு ஒரு MoU போட்டிருக்கிறார்களே, சட்டமன்றம் நடக்கும்போது இப்படி ஒரு MoU போடுவது, எங்களுக்குத் தெரிவிக்காமல் செய்வது நியாயமா?" என்று ஒரு கேள்வி கேட்டார்கள். சில உண்மைகளை இந்த அவைக்கு நான் சொல்கிறேன். 16,000 கோடி ரூபாயை, இந்தியாவிலேயே, தமிழகத்திற்குத்தான் Rural Electrification Corporation- க்குக் கொடுப்பது என்று முடிவு செய்து, கடந்த மாதமே MoU செய்வதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால், திடீரென்று அதனுடைய தலைவர் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்ட காரணத்தினால், அப்பொழுது அந்த ஒப்பந்தம் செய்ய முடியவில்லை. அவர் இரண்டு தினங்களுக்கு முன்னாலே, டெல்லியிலிருந்து தொடர்புகொண்டு, "இரண்டாம் தேதி நான் சென்னைக்கு வருகிறேன்; அப்பொழுது அந்த ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முதலமைச்சருக்கு வாய்ப்புக் கிடைக்குமா?" என்று கேட்டபோது, நாங்கள் முதலமைச்சரைக் கலந்து பேசி, இரண்டாம் தேதி காலையிலே 9 மணிக்கெல்லாம் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று தெரிவித்ததன் பேரிலேதான் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதே தவிர, இந்த அவைக்குத் தகவல் தெரிவிக்கக் கூடாது என்றோ, மறைக்க வேண்டும் என்றோ இந்த அரசுக்கு எந்தவிதமான நோக்கமும் இல்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம், சேத்னா என்கிற பொறியியல் கல்லூரி மாணவி,

தன்னுடைய அறையில் மர்மமான முறையில், இறந்துகிடந்ததையொட்டி அங்கு படிக்கிற மருத்துவம். . .

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், இதுசம்பந்தமாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடு) Reply கேட்டிருக்கிறோம். Reply வந்ததற்குப் பிறகுதான் எடுக்கப்படும். (குறுக்கீடு) Reply வராமல் எடுப்பது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கோவிந்தசாமி, என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் தங்களிடத்தில் தமிழகத்தினுடைய சில முக்கியமான பிரச்சினைகள்குறித்து, கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கொடுத்திருந்தேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் விவாதிக்கப்பட்ட அந்த மானியக் கோரிக்கையில், அளவு கடந்து எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தால். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன் (குறுக்கீடுகள்) குறிப்பிட்ட நேரத்தைவிட நீங்கள் அதிகமாக நேரம் எடுத்திருந்தீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மானியத்தை நேற்றையதினம் முடிக்க முடியாத அளவுக்கு விவாதம் நீடித்துவிட்ட காரணத்தால், அமைச்சர் பதில் சொல்லுவதற்காக இன்றையதினம் உள்ள கேள்வி நேரத்தையே கைவிட்டு, நீக்கி, அந்த நேரத்தை பதில் சொல்வதற்குப் பயன்படுத்துவது என்று நேற்றையதினம் தீர்மானிக்கப்பட்டது. அதற்காக நான் தீர்மானமும் கொண்டுவந்து நிறைவேறி இருக்கிறது. ஓர் அமைச்சர் நேற்றையதினம் நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றால், இடையில் வேறு எந்தப் பிரச்சினையும் எழுப்ப முடியாது. ஆகவே, தயவுசெய்து இன்றைக்குப் புது நாள் என்ற முறையில், இன்றைக்குக் காலையில் தொடங்குவது என்ற முறையில், அவரவர்களுடைய பிரச்சினைகளை எழுப்பாமல், அமைச்சர் பதில்

சொல்வதற்கு முதலில் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரம் இரத்து என்று சொன்னாலே, வேறு எந்தப் பிரச்சினையும் எழுப்பக்கூடாது; எழுப்புவது முறையல்ல.

3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 2-4-2007 ஆம் நாளன்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். மானியக் கோரிக்கை எண் 14 எரிசக்தித் துறை மற்றும் 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தமிழ்நாடு மின்சார வாரியம், எரிசக்தித் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய மானியங்கள்மீது விவாதம் நடத்துவதற்கும், பதிலுரை அளிப்பதற்கும் எனக்கு வாய்ப்புத் தந்த தமிழினத் தலைவரும், தமிழக முதல்வருமான... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு மானியங்களுக்கும் சேர்த்து பதில் சொல்வார்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை நான் அளிக்க இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நேற்று இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள், ஒரு கருத்தைச் சொன்னார்கள். அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கும்போதுதான், தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு, 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டதாகவும்,